# பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு

இலக்கம் 20, வோட் பிளேஸ்
கொழும்பு 07.

2018.06.14

**ஆணைக் குழுச் சுற்றறிக்கை இலக்கம் : 17 / 2016 (vi) .**

பல்கலைக்கழக உபவேந்தர்கள்

வளாக அதிபதிகள்

நிறுவகப் பணிப்பாளர்கள்

**பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் மற்றும் உயர் கல்வி நிறுவகங்களின் கல்விசார் மற்றும் கல்விசாரா ஆளணியின் சம்பளத்தில் திருத்தம் மேற்கொள்ளல் - 2016**

மேற்குறிப்பிடப்பட்ட விடயம் தொடர்பான 2016.12.08 ஆம் திகதிய 17/2016 (i) ஆம் இலக்க, 2017.02.13 ஆம் திகதிய 17/2016 (ii) ஆம் இலக்க, 2017.04.27 ஆம் திகதிய 17/2016 (iii) ஆம் இலக்க, 2017.08.03 ஆம் திகதிய 17/2016 (iv) ஆம் இலக்க, மற்றும் 2018.06.01 ஆம் திகதிய 17/2016 (v) ஆம் இலக்க, ஆணைக்குழுச் சுற்றறிக்கைகள் ஊடாக திருத்தப்பட்ட 2016.12.05 ஆம் திகதிய 17/2016 ஆம் இலக்க, ஆணைக்குழுச் சுற்றறிக்கை ஊடாக அமுல்படுத்தப்பட்ட 2018.02.23 ஆம் திகதிய 04/2016 (i) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை ஊடாக திருத்தப்பட்ட 2016.08.18 ஆம் திகதிய 04/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை மீது தங்களது கவனத்தை ஈர்க்கச் செய்கின்றேன்.

2. நிதி மற்றும் வெகுசன ஊடகங்கள் அமைச்சின் திறைசேரிச் செயலாளரால் வெளியிடப்பட்ட 2018.06.07 ஆம் திகதிய 04/2016 (II) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கை ஊடாக, இணைக்கப்பட்டுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் 2018.05.30 ஆம் திகதிய 18/1111/809/030 ஆம் இலக்க அமைச்சரவைப் பத்திரத்தின் ஊடாக 04/2016 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் (திருத்தப்பட்டதற்கமைய) 09.1 ஆவது உப பந்தியை திருத்தியமைப்பதற்கு அமைச்சரவையினால் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

3. அதற்கமைய, சம்பளத்தின் சதவீதமொன்றாக அல்லது / மற்றும் சம்பளத்தின் அடிப்படையில் செலுத்தப்படும் அனைத்துப் படிகளையும் 2018.06.01 ஆம் திகதி முதல் அமுலுக்குவரும் வகையில் தற்போதைய சம்பளத்திற்கமைய கணக்கிடுதல் வேண்டும்.

4. நிதி மற்றும் வெகுசன ஊடகங்கள் அமைச்சின் திறைசேரிச் செயலாளரால் வெளியிடப்பட்ட 04/2016 (II) ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது. **- இணைப்பு.**

5. தயவு செய்து இதன் பிரகாரம் நடவடிக்கை மேற்கொள்ளவும்.

**ஒப்பம் / பேராசிரியர் மொஹான் த சில்வா**

தலைவர்

**பிரதிகள்:-**

1. செயலாளர், உயர்கல்வி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு.
2. தலைவர் அலுவலகம், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
3. உப தலைவர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
4. பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு உறுப்பினர்கள்,
5. செயலாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
6. பீடாதிபதிகள்.
7. பல்கலைக்கழகங்களின் பதிவாளர்கள்.
8. கணக்காளர், பல்கலைக்கழகமானியங்கள் ஆணைக்குழு.
9. பல்கலைக்கழகங்களின் நிதிப் பொறுப்பாளர்கள் (Bursars).
10. நூலகர்கள், சிரேஷ்ட உதவி நூலகர்கள், உதவி நூலகர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள்.

11. பிரதிப் பதிவாளர்கள் /சிரேஷ்ட உதவிப் பதிவாளர்கள்/ உதவிப் பதிவாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்.
12. பிரதி நிதிப் பொறுப்பாளரகள் /சிரேஷ்ட உதவிநிதிப் பொறுப்பாளர்கள்/ உதவிநிதிப் பொறுப்பாளர்கள் - உயர் கல்வி நிறுவகங்கள் /வளாகங்கள்
13. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு.
14. பல்கலைக்கழகங்களின் அரசாங்க கணக்காய்வு அத்தியட்சகர்கள்
15. உயர் கல்வி நிறுவகங்களின் சிரேஷ்ட உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள் /உதவி உள்ளகக் கணக்காய்வாளர்கள்.
16. சகல தொழிற்சங்களினதும் செயலாளர்கள்.
17. கணக்காய்வாளர் நாயகம்.

கோப்பு இலக்கம் : UGC/HR/2/9/86 (16 ஆவது தொகுதி)